105—

வட்டாட்சியர் அலுவலகம்

***23160—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிஞ்சிப்பாடி தொகுதி, குறிஞ்சிப்பாடியில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கான இடத்தைத் தேர்வு செய்யும் பணியைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

குறிஞ்சிப்பாடி வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு, குறிஞ்சிப்பாடி வட்டம், ராசாக்குப்பம் கிராமம், புல எண் 48/13, விஸ்தீரணம் 1.18 ஹெக்டேர் களம் புறம்போக்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடு கட்டிப் போரடித்தால் மாளாது, மாளாது என்று சொல்லி யானை கட்டிப் போரடித்த காவேரி டெல்டா பகுதிவாழ் விவசாயப் பெருமக்களுடைய வாழ்வு வளம் பெற, நலம் பெற, வீரம், விவேகம், அறிவாற்றல் இவை அனைத்தும் ஒருங்கே பெற்றிருக்கிற வீரத்தின் விளைநிலமாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய 22 ஆண்டுக்கால போராட்டத்திற்குப் பின்னால், இறுதியில் சட்டப் போராட்டத்தையும் நடத்தி காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்திருக்கிற எங்களுடைய தங்கத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், அதோடு மாணவர்களுடைய நலனைக் கருத்திலேகொண்டு தாயாக நான் இருக்கிறேன் யாரும் கவலைப்பட, அச்சப்படத் தேவையில்லை என்று சொல்லி இலங்கைவாழ் தமிழர்களுக்காக ஒரு தீர்மானம் அல்ல ஓர் ஆயிரம் தீர்மானத்தை நிறைவேற்றித் தர, பாதுகாக்க*

2013 மார்ச் 28]

நான் இருக்கிறேன் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) அமர்ந்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி குறிஞ்சிப்பாடி தொகுதியிலே புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு இடத்தைத் தேர்வு செய்திருக்கிற இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் குறிஞ்சிப்பாடி தொகுதி மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மு.க. ஸ்டாலின், என்ன விஷயம், சொல்லுங்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் வெளிவந்துள்ள அகில இந்திய அளவில் பிரபலமான ஒரு பத்திரிகையில்,* Times of India *பத்திரிகையில் ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதை திடீரென்று சொன்னால் எப்படி? (குறுக்கீடுகள்) அறிவிப்புக் கொடுத்திருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) திடீரென்று பேசினால் எப்படி? இதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) இதுகுறித்து என்னிடம் முன்பே அனுமதி கேட்டிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) வேறு ஏதோ பேசப் போகிறீர்கள் என்று நினைத்தால், அறிவிப்புக் கொடுக்காமல் இப்படி பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) இதை நான்* allow *பண்ண முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) பத்திரிகையில்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*